புதுச்சேரி மாநில தலைமை அலுவலகம்
38, Main Road, Oulgreat, Near KFC Moolakulam, Puducherry-605009,
Cell: 97505 89992,9629620802

PRGI.NO.TNTAM/25/A1635 PRGI.No.PNTAM/26/A7529 GSTIN: 33KXSPK6994Q1ZX

# நீதிகதிர் எக்ஸ்பிரஸ்

NEETHIKATHIR EXPRESS
மறைக்கப்பட்ட செய்திகள் திறக்கப்படும்
காலை நாளிதழ்

நீதி கதிர் எக்ஸ்பிரஸ் சென்னை அலுவலகம்.
No.19\10 1st Floor F1 ,7th Street, Nehru Colony, Nanganallur, Chennai - 600061
Cell: 7810068421,9488420449
neethiPress@ gmail.com
ஆசிரியர்: K.சபியுல்லா

மலர்: 02 | இதழ்: 93 | 08-10-2026 | வியாழன் | பக்கம்- 4 | விலை- ரூ.5 | திருச்சி- புதுச்சேரி
Volum 02 | Issue: 93 | 08-10-2026 | Thursday | Pages - 4 | Price- Rs. 5 | Trichy-Puducherry

## “2047க்குள் வளர்ந்த இந்தியாவை நிச்சயம் உருவாக்குவோம்” : பிரதமர் மோடி உறுதி



புதுடெல்லி: அக்8–

2047க்குள் இந்தியாவை வளர்ந்த நாடாக மாற்றுவது உள்பட நமது இலக்குகள் அனைத்தையும் நாம் நிச்சயம் நிறைவேற்றுவோம் என்று பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

கடந்த 2001ம் ஆண்டின் இதே நாளில் (அக்டோபர் 7) குஜராத்தின் முதல்வராக முதன்முறையாக பொறுப்பேற்றார் நரேந்திர மோடி. மூன்று முறை முதல்வராக பதவி வகித்த அவர், பின்னர் நாட்டின் பிரதமராக பதவி வகித்து வருகிறார். அரசு தலைமைப் பொறுப்பில் 25 ஆண்டுகளை நிறைவு செய்துள்ளதை முன்னிட்டு டெல்லியில் நடைபெற்ற வளர்ந்த இந்தியாவுக்கான சங்கல்ப சபா நிகழ்ச்சியில் கலந்து கொண்டு பிரதமர் மோடி உரையாற்றினார்.

அப்போது அவர் கூறியதாவது: வாக்கு அரசியல் காரணமாக சமூகம் பிளவுபட்டிருப்பது நாடு எதிர்கொள்ளும் மிகப்பெரிய சவால்களில் ஒன்று. ஒரு விவசாயியின் வயலில் தண்ணீர் இல்லாவிட்டால், அது ஒரு குறிப்பிட்ட சாதியை மட்டும் பாதிக்குமா? மின்சாரம் இல்லாவிட்டால், அது ஒரு குறிப்பிட்ட சமூகத்தை மட்டும் பாதிக்குமா? இல்லை என்பதே இதற்கான பதில். பிரச்சினை அனைவருக்குமானது எனும்போது, அதற்கான தீர்வும் அனைவருக்குமான தாகவே இருக்க வேண்டும்.

நூறு ஆண்டுகளுக்கு முன்பு நாம் 40 கோடிக்கும் குறைவாக இருந்தோம். இன்று 140 கோடிக்கும் அதிகமாக இருக்கிறோம் 140 கோடி மக்களும் இணைந்து 2047க்குள் வளர்ந்த இந்தியாவை உருவாக்குவோம். நிச்சயமாக நாம் அதைச் செய்வோம். உலகின் முதல் 3 பொருளாதாரங்களில் ஒன்றாக நாம் உருவெடுப்போம். நிச்சயமாக நாம் அதைச் செய்வோம். உலகளாவிய உற்பத்தி மையமாக இந்தியாவை மாற்றுவோம். நிச்சயமாக நாம் அதைச் செய்வோம். ஒலிம்பிக் போட்டியை நடத்துவோம். நிச்சயமாக நாம் அதைச் செய்வோம். விண்வெளிப் பயணத்தை மேற்கொள்வோம். நிச்சயமாக நாம் அதைச் செய்வோம். இந்த ஆற்றல், இந்த உற்சாகம், இந்த நம்பிக்கை அசாதாரணமானவை.

இஸ்ரேல் சென்ற விமானத்தை விபத்துக்குள்ளாக்க ஃபிளை துபாய் விமானத்தின் துணை விமானி முயன்றபோது, தான் கத்தியால் குத்தப்பட்ட நிலையிலும் அந்த சதியை முறியடித்த இந்திய விமானி ஸ்மித் மச்சார் குறித்தே இன்று உலகம் பேசுகிறது. எதிர்காலத்தில் இந்தியாவில் தயாரிக்கப்பட்ட விமானங்களைப் பற்றியும் உலகம் பேசும் ஒரு நாள் வரும்.

தொலைநோக்குப் பார்வையுடன் கூடிய கொள்கைகள் மற்றும் இடைவிடாத கடின உழைப்பின் மூலம் இந்த இலக்குகுள் அடையப் படும். இந்தியா சவால்களை எதிர்கொள்ள நேரிடலாம். ஆனால், நம்மிடம் 140 கோடி தீர்வுகள் உள்ளன.

என் மீது நம்பிக்கை வைத்திருக்கும் நாட்டு மக்கள் முன் நான் தலைவணங்குகிறேன். என்னைப்பொறுத்த வரை மக்களே கடவுள். கடினமாக உழைக்கும் பாஜக தொண்டர்களே எனது பலம். பாஜக மற்றும் தேசிய ஜனநாயகக் கூட்டணியைச் சேர்ந்த சக ஊழியர்களுக்கும்,ஜனநாயகத்தின் மீது மிகுந்த மரியாதை கொண்ட அனைவருக்கும் நான் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இவ்வாறு பிரதமர் மோடி உரையாற்றினார்.

## பெரம்பூரில் எம்எல்ஏ அலுவலகத்துக்கு முதல்வர் விஜய் வருகை: மக்களிடம் மனுக்களை பெற்றார்



பெரம்பூர்: அக்.8–

முதல்வர் விஜய், நேற்று காலை தனது எம்எல்ஏ அலுவலகத்துக்குச் சென்று அங்கிருந்தவர்களிடம் புகைப்படம் எடுத்துக் கொண்டார். கடந்த சட்டமன்றத் தேர்தலில் முதல்வர் ஜோசப் விஜய் பெரம்பூர் தொகுதியில் போட்டியிட்டு வெற்றி பெற்றார். அதன்பிறகு, அத்தொகுதியில் தனது எம்எல்ஏ அலுவலகத்தை அமைத்து, நிர்வாகிகளை அமர்த்தி பொதுமக்களிடம் இருந்து மனுக்களை பெற்று, அவற்றை தன்னிடம் அனுப்பிவைக்கும் பணிகளில் செயல்பட்டு வந்ததாக கூறப்படுகிறது.

இந்நிலையில், மாதவரத்தில் உள்ள தமிழ்நாடு பால் கூட்டுறவு இணையத்தின் சார்பில் புதிதாக கட்டப்பட்ட ஆவினின் மாநில மத்திய ஆய்வகத்தின் துணை கட்டிடத்தை நேற்று காலை தமிழக முதல்வர் ஜோசப் விஜய் பங்கேற்று திறந்து வைத்தார். தமிழ்நாடு அரசியல்

பின்னர் அவர் மூலக்கடை, கொடுங்கையூர் வழியாக திரும்பி செல்லும்போது எருக்கஞ்சேரி, சர்மா நகர் பகுதியில் உள்ள தனது பெரம்பூர் சட்டமன்ற தொகுதி அலுவலகத்துக்கு வருகை தந்தார். அங்கு மனுக்களை கொடுப்பதற்கு காத்திருந்த ஏராளமான பொதுமக்களிடம் இருந்து பல்வேறு கோரிக்கைகள் தொடர்பான மனுக்களை பெற்றார்.மேலும்,பெரம்பூர்எம்எல்ஏ அலுவலகத்தில் மேற்கொள்ளப் பட்டு வரும் பணிகள் குறித்து சம்பந்தப்பட்ட துறைஅதிகாரிகளிடம் கேட்டறிந்தார்.

இதைத் தொடர்ந்து, தனது எம்எல்ஏ அலுவலகத்துக்கு வெளியே நின்றிருந்த தவெக தொண்டர்களுடன் செல்பி மற்றும் குழுப் புகைப்படம் எடுத்து கொண்டார். பின்னர் அங்கிருந்து முதல்வர் ஜோசப் விஜய் காரில் ஏறி கிளம்பி சென்றார். இந்நிகழ்வில் மாவட்ட செயலாளர் சிவா உள்பட பல்வேறு அரசு அதிகாரிகள் மற்றும் தவெக நிர்வாகிகள் ஆகியோர் உடனிருந்தனர்.

## “மானிய அறிவிப்பை அடுத்து சூரிய மின் உற்பத்திக்கு 20,000 பேர் விண்ணப்பம்” அமைச்சர் நிர்மல் குமார் தகவல்



சென்னை: அக்.8–

வீட்டு பயன்பாட்டுக்கான சூரிய மின்சக்தி திட்டத்துக்கு மத்திய அரசோடு இணைந்து மாநில அரசும் மானியம் வழங்கும் என அறிவிக்கப்பட்டதை அடுத்து, இது தொடர்பாக 20,000 விண்ணப்பங்கள் வரப்பெற்றுள்ளதாக தமிழக மின்துறை அமைச்சர் நிர்மல் குமார் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக செய்தியாளர்களிடம் பேசிய அவர்,“வீட்டுபயன்பாட்டுக்கான சூரிய மின்சக்தி (சோலார்) உற்பத்தி திட்டத்துக்கான மானியம் குறித்து முதல்வர் விஜய் இரண்டு வாரங்களுக்கு முன்பு சட்டப்பேரவையில் அறிவித்திருந்தார். ஆன்லைன் முறையில் இத்திட்டத்தை செயல்படுத்துவதற்கான போர்ட்டல் இரு வாரங்களுக்கு முன்பு அறிமுகப்படுத்தப் பட்டது. இந்த இரண்டு வாரங்களில் 20 ஆயிரம் விண்ணப்பங்கள் வரப்பெற்றுள்ளன.

இத்திட்டத்தின் கீழ், ஒன்றிய அரசின் மானியம் மற்றும் மாநில அரசின் மானியம் இரண்டும் பயனாளிகளுக்குக் கிடைக்கும்.

தமிழகம் முழுவதும் சோலார் பேனல்களை விற்பனை செய்யும் சுமார் 1,500 விற்பனையாளர்களுடன் இன்று ஆலோசனை நடத்தப்பட்டது. இதில், சோலார் பேனல்களை பொருத்தும் பணிகளை ஆன்லைன் முறையில் எளிமைப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் குறித்து விளக்கப்பட்டது.

மானியம் பெறத் தகுதியான 1,500 பேருக்கு மானியத்தை விடுவிப்பதற்கான பணிகள் நடைபெற்று வருகின்றன. இவ்வாறு ஒவ்வொரு கட்டத்திலும் நடைபெற வேண்டிய பணிகளை விரைவாக முடிப்பதற்கான முயற்சிகளில் அரசு ஈடுபட்டு வருகிறது.

தமிழகத்தில் இதுவரை ஒரு லட்சம் எண்ணிக்கையில்தான் வீடுகளுக்கு சோலார் பேனல்கள் பொருத்தப்பட்டுள்ளது. தற்போது தமிழக அரசின் மானிய அறிவிப்பை அடுத்து இரண்டு வாரங்களில் 20 ஆயிரம் விண்ணப்பங்கள் கிடைக்கப்பெற்றிருப்பது, இத்திட்டத்துக்கு கிடைத்த வரவேற்பையே காட்டுகிறது. அடுத்த ஆண்டு மார்ச் மாதத்துக்குள் ஒரு லட்சம் வீடுகளின் மேற்கூரைகளில் சோலார் பேனல்களைப் பொருத்த இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

பேட்டரிகளில் மின்சாரத்தை சேமிப்பது தொடர்பான கொள்கை 10 நாட்களுக்குள் வெளியிடப்படும். அதிகமாக உற்பத்தியாகும் மின்சாரத்தை பேட்டரிகளில் சேமித்து பிறகு பயன்படுத்துவதில் சிறந்த கொள்கையை நாம் பின்பற்ற இருக்கிறோம். புதுப்பிக்கத்தக்க மின் உற்பத்தியில் நாம் மிகப்பெரிய அளவில் வளர்ச்சி அடைவதற்கான திட்டங்களை அரசு வகுத்து வருகிறது. இன்னும் ஒருசில வாரங்களில் அனைத்து நடவடிக்கைகளும் முடிவுபெற்று, டிஜிட்டல் முறையில் போர்ட்டலில் இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படும்.

அப்போதுதான் சோலார் பேனல் விற்பனையாளர்கள் தாமதமின்றி பணிகளைச் செய்வது, மீட்டர் பொருத்தும் பணிகளை மின்வாரியத்துறையினர் தாமதமின்றி செய்வது என அனைத்தையும் இதில் கண்காணிக்க முடியும். தாமதம் ஆகிறது என்றால், எங்கே ஆகிறது என்பதையும் இதன்மூலம் அறிந்து கொள்ள முடியும். கடந்த காலங்களில் மீட்டர் பொருத்துவதில்தான் அதிக தாமதம் ஏற்பட்டது. இனி அவ்வாறு இல்லாமல், ஒரு குறிப்பிட்ட காலக்கெடுவுக்குள் பணிகள் முடிக்கப்பட வேண்டும்.

கடந்த ஆண்டைவிட இந்த ஆண்டு பீக் ஹவர்களில் 3,000 மெகாவாட் மின்சாரம் கூடுதலாக தேவைப்படுகிறது. நெய்வேலி உட்பட ஒன்றியத் தொகுப்பில் இருந்து தமிழகத்துக்கு வர வேண்டிய மின்சாரமும் 3,000 மெகாவாட் அளவுக்கு வரவில்லை. எனவே, இவற்றைக் கருத்தில் கொண்டு கூடுதல் மின்சாரத்தைக் கொள்முதல் செய்வதற்கான டெண்டரை வெளியிட்டிருக்கிறோம்.” என தெரிவித்துள்ளார்.

## ரெப்போ வட்டி விகிதம் 5.50% ஆக உயர்வு: வீடு, வாகனக் கடன் வட்டி அதிகரிக்க வாய்ப்பு

மும்பை: அக்.8–

வங்கிகளுக்கு ரிசர்வ் வங்கி வழங்கும் குறுகிய கால கடனுக்கான ரெப்போ வட்டி விகிதம் உயர்த்தப்பட்டுள்ளது. கடந்த பிப்ரவரி 2023ம் ஆண்டுக்குப் பின்னர் ரெப்போ வட்டி விகிதம் உயர்த்தப்படுவது இதுவே முதன்முறை என்பது குறிப்பிடத்தக்கது.

அதன்படி முந்தைய அளவான 5.25 சதவீதத்தில் இருந்து 25 அடிப்படைப் புள்ளிகள் உயர்த்தப்பட்டு, ரெப்போ வட்டி 5.50% ஆக உயர்த்தப்படுவதாக ரிசர்வ் வங்கி ஆளுநர் சஞ்சய் மல்ஹோத்ரா தெரிவித்துள்ளார். ரெப்போ வட்டி விகிதம் உயர்த்தப்பட்டுள்ளதால், வங்கிகள் வழங்கும் வீடு, வாகனம் மற்றும் இதர கடன்களுக்கான வட்டி விகிதமும் உயரும் வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

இரண்டு மாதத்துக்கு ஒருமுறை ரிசர்வ் வங்கியின் நிதிக் கொள்கை கமிட்டி கூட்டம் நடைபெறும். அப்போது சூழ்நிலையை கருத்தில் கொண்டு பல்வேறு முக்கிய முடிவுகள் எடுக்கப்படும். இதில் ரெப்போ வட்டி விகிதம் மாற்றுவது தொடர்பான முடிவும் அடங்கும். அதன்படியே, வங்கிகளுக்கு ரிசர்வ் வங்கி வழங்கும் குறுகிய கால கடனுக்கான ரெப்போ வட்டி விகிதம் உயர்த்தப்பட்டுள்ளது.

காரணம் என்ன?

பணவீக்கம் அதிகரிக்கும் அபாயம், அமெரிக்க டாலருக்கு நிகரான இந்திய ரூபாயின் மதிப்பு 97 வரை சரிவு போன்ற காரணங்களாலும், சர்வதேச சந்தையில் கச்சா எண்ணெய் விலை உயர்வாலும் ரிசர்வ் வங்கி ரெப்போ வட்டி விகிதத்தை உயர்த்தப்பட்டிருப்பதாகத் தெரிகிறது.

நடப்பு நிதியாண்டில் நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தி 7.1 சதவீதமாக இருக்கும் என்று கணிக்கப்பட்டுள்ளது. அதேபோல், 202627 நிதியாண்டுக்கான நுகர்வோர் விலைக் குறியீடு (சிறிமி) 5.2% ஆக இருக்கும் எனவும் கணிக்கப்பட்டுள்ளது.

ரிசர்வ் வங்கி ஆளுநரின் உறுதி:

நிதிக் கொள்கை கூட்டத்துக்குப் பின்னர் செய்தியாளர்களை சந்தித்த ரிசர்வ் வங்கி ஆளுநர், “விலைவாசி நிலைத்தன்மை மற்றும் நிதி நிலைத்தன்மை இரண்டும் நீண்டகால நிலையான வளர்ச்சிக்கு அவசியம். எனவே அவற்றுக்காக நாங்கள் தொடர்ந்து பாடுபடுவோம்.

அதேபோல், உலகளாவிய நிச்சயமற்ற சூழலுக்கு மத்தியில், பொருளாதாரத்தின் மீள்தன்மையை மேலும் அதிகரிக்கும் கொள்கைகளை ரிசர்வ் வங்கி தொடர்ந்து செயல்படுத்தும்,” என்று கூறினார்.

ரெப்போ விகிதம்?

ரெப்போ விகிதம் என்பது வங்கிகளுக்கு ரிசர்வ் வங்கி வழங்கும் கடனுக்கான வட்டி விகிதமாகும். ரிசர்வ் வங்கி தற்போது இதில் மாற்றம் ஏதும் மேற்கொள்ளவில்லை. இதன் காரணமாக வீடு, வாகனம், தனிநபர் கடன் போன்ற கடன்களுக்கான வட்டி விகிதம் இப்போதைக்கு உயராது எனத் தெரிகிறது. ஏனெனில், வழக்கமாக ரிசர்வ் வங்கி, வங்கிகளுக்கு வழங்கும் கடனுக்கான விகிதத்தை உயர்த்தினால், வங்கிகளும் தங்கள் வாடிக்கையாளர்களுக்கு வழங்கும் கடன் மீதான வட்டி விகிதத்தை உயர்த்தும்.

கடைசியாக கடந்த ஆண்டு டிசம்பரில் ரெப்போ வட்டி விகிதம் 0.25 சதவீதம் குறைத்து 5.25 சதவீதமாக ஆர்பிஐ நிர்ணயித்தது. இதுவரை அந்த விகிதம் தொடர்ந்தது குறிப்பிடத்தக்கது.

## வேதியியல் துறைக்கான நோபல் பரிசு பிரான்ஸ், ஜப்பான் விஞ்ஞானிகளுக்கு கூட்டாக அறிவிப்பு

ஸ்டாக்ஹோம், அக். 8

2026ம் ஆண்டுக்கான வேதியியல் துறை நோபல் பரிசு 2 விஞ்ஞானிகளுக்கு கூட்டாக அறிவிக்கப்பட்டுள்ளது. நோபல் பரிசுஇயற்பியல், வேதியியல், மருத்துவம், பொருளாதாரம், இலக்கியம் ஆகிய துறைகளில் சிறப்பாக செயல்பட்டவர் களுக்கும், அமைதிக்காக பாடுபட்டவருக்கும் ஆண்டுதோறும் நோபல் பரிசு வழங்கப்பட்டு வருகிறது. இந்த ஆண்டுக்கான நோபல் பரிசு அறிவிப்பு நேற்று முன்தினம் தொடங்கியது. மருத்துவ துறைக்கான நோபல் பரிசு, அமெரிக்க, ஜெர்மனி விஞ்ஞானிகள் 3 பேருக்கு பகிர்ந்து அளிக்கப்பட்டது. இயற்பியல் துறைக்கான நோபல் பரிசு பெல்ஜியம் விஞ்ஞானி பிரான்சிஸ் ஹால்செனுக்கு அறிவிக்கப்பட்டது. .வேதியியல் துறைக்கான பரிசு இந்த நிலையில், வேதியியல் துறைக்கான நோபல் பரிசு அறிவிப்பை ராயல் ஸ்வீடிஷ் அகாடமி ஆப் சயின்ஸ் இன்று வெளியிட்டுள்ளது. பிரான்ஸ் விஞ்ஞானி ஹென்றி பி.காகன் மற்றும் ஜப்பான் விஞ்ஞானி கென்சோ சோய் ஆகியோருக்கு இப்பரிசு பகிர்ந்தளிக்கப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. சமச்சீரற்ற கரிமத் தொகுப்பில், நேரியல் அல்லாத விளைவுகள் மற்றும் தன்வினையூக்கத்தைக் கண்டுபிடித்ததற்காக, ஹென்றி பி.காகன் மற்றும் கென்சோ சோய் ஆகியோருக்கு வேதியியல் நோபல் பரிசு வழங்கப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.. பரிசுத்தொகை இந்த ஆண்டுக்கான நோபல் பரிசுத்தொகை 1 கோடியே 20 லட்சம் சுவீடன் பணம் (சுமார் 11.55 கோடி ரூபாய்) ஆகும். இந்த நோபல் பரிசு வருகிற டிசம்பரில் வழங்கப்படும். நாளை இலக்கியத்துக்கான நோபல் பரிசு அறிவிக்கப் படுகிறது. அமைதிக்கான நோபல் பரிசு 9ந்தேதியும், பொருளாதாரத்துக்கான நோபல் பரிசு 12ந்தேதியும் அறிவிக்கப்படுகிறது.



ஈரோடு மாவட்டம் ஹோட்டல் ராயல் எம்பேஸியில் மாவட்ட தொழில் மையம் மற்றும் இந்தியன் இன்ஸ்டிட்யூட் ஆப் பேக்கேஜிங் நிறுவனம் இணைந்து நடத்திய குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில நிறுவனங்களுக்கு தேவையான சுற்றுச்சூழலுக்கு உகந்த பேக்கேஜிங் தொடர்பான நிகழ்ச்சியில் அமைக்கப்பட்டிருந்த கருத்துக்காட்சி அரங்குகளை மாவட்ட ஆட்சித்தலைவர் கந்தசாமி பார்வையிட்டார். உடன் மாவட்ட வருவாய் அலுவலர் சாந்தகுமார், பொது மேலாளர் திருமுருகன் உட்பட பலர் உள்ளனர்.

# குறுங்காடுகள் அமைக்கும் கீரமங்கலம் அரசு பள்ளி மாணவிகள்

தமிழ்நாடு அரசு அனைத்து மாவட்டங்களிலும் குறுங்காடுகள் உருவாக்கி பல்லுயிர் பெருக்கத்திற்கு உதவிடும் வகையில் இந்த ஆண்டு ஒரு கோடி பனை விதை நெடும் பணி தொடங்கி வைத்து அனைத்து மாவட்டங்களிலும் பனை விதைகள் விதைக்கப்பட்டு வருகிறது.




தமிழ்நாட்டில் பனை மரங்களை அதிகரிப்பதற்காக தமிழ்நாடு சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை, தமிழ்நாடு பசுமை இயக்கம், வனத்துறை, தமிழ்நாடு தன்னார்வலர்கள் அமைப்பு, ராணியம்மாள் கல்வி அறக்கட்டளை, கீரமங்கலம் அரசு மகளிர் மேல்நிலைப்பள்ளி மாணவிகள் இணைந்து பனை குறுங்காடுகள் அமைக்கும் பணியில் அனைத்து மாணவிகளும் ஒன்றிணைந்து பனை விதைகளை சேகரித்து நடவு செய்துள்ளனர்.

இந்நிகழ்வினை பள்ளியின் தலைமை ஆசிரியர் .வள்ளிநாயகி தொடங்கி வைத்து அனைவரையும் வரவேற்று சிறப்பித்தார். சுற்றுச்சூழலை மேம்படுத்துவதற்கான உறுதி மொழியினை தமிழ்நாடு தன்னார்வலர் பொறியாளர். சர்வம் சரவணன் வாசிக்க பள்ளியின் அனைத்து ஆசிரியர்கள், மாணவிகள் அனைவரும் உறுதி மொழியினை ஏற்றுக் கொண்டனர்.

நிகழ்வில் பள்ளியின் தலைமை ஆசிரியர் ந. வள்ளிநாயகி ஒருகோடி பனை விதை நடும் நெடும் பணியில் நமது பள்ளி மாணவர்கள் அனைவரும் பத்து பனை விதைகளை சேகரித்து உங்கள் பகுதியில் உள்ள ஏரிகளின் கரைகள், தோட்டங்கள், குளங்கள் கறைகளில் நட்டு புதிய பனை மரங்களை உருவாக்குங்கள் என்று மாணவர்கள் முன்னிலையில் எடுத்துரைத்தார்.

பள்ளி வளாகத்தில் பனை விதைகளை நடவு செய்து சிறப்பித்த நாட்டு நலப்பணித்திட்ட மாணவிகளுக்கு தமிழ்நாடு தன்னார்வலர் அமைப்பு, ராணியம்மாள் கல்வி அறக்கட்டளை, இளம் தலைமுறை எழுத்தாளர்கள் பதிப்பகம் சார்பாக பொறியாளர். சர்வம் சரவணன் நோட்டு புத்தகத்தை பரிசாக வழங்கி விவசாயிகளுக்கும், எளியவர்களுக்கும் பயன்படுகின்ற இந்த மண்ணை காப்பதற்கு இன்றைய மாணவர்கள் வருங்கால தலைமுறைக்காக உங்களால் உங்கள் கைகளில் ஒரு பனை விதை எடுத்து மண்ணில் விதைத்து சிறந்த சுற்றுச்சூழலை உருவாக்க வேண்டும் என்று மாணவர்கள் முன்னிலையில் தெரிவித்து சிறப்பித்தார்.

பள்ளியின் தலைமை ஆசிரியர் .ந.வள்ளிநாயகி மற்றும் உதவி தலைமை ஆசிரியர், நல்லாசிரியர் விருத்தாளர்.

.குகன் பொறியாளர்.சர்வம் சரவணன் ஒரு கோடி பனை விதை நெடும் பணியில் சிறந்த ஒத்துழைப்பை நல்கி சிறப்பித்தமைக்காக தமிழ்நாடு தன்னார்வலர்கள் அமைப்பின் சார்பாக சால்வை அணிவித்து நன்றி தெரிவித்தார்.

பனை விதைகளைச் சேகரிக்கும் பணியினை உடற்கல்வி ஆசிரியர் . அருந்ததி, நாட்டு நலப்பணித் திட்ட அலுவலர் மற்றும் மாணவிகள் ஆகியோர் சேகரித்து சிறப்பித்தனர்.

தலைமையாசிரியர், உதவி தலைமை ஆசிரியர், தன்னார்வலர்கள், இருபால் ஆசிரியர்கள், உடற்கல்வி ஆசிரியர், அலுவலக பணியாளர்கள், அங்கன்வாடி பணியாளர்கள், மாணவிகள் அனைவரும் பனை விதைகளை கையில் வைத்துக்கொண்டு உறுதி மொழியினை கூறி மண்ணில் விதைத்து சிறப்பித்தனர்.

# நெற்பயிர் காப்பீடு செய்வதற்கு இறுதி நாள் நவம்பர் 15 மாவட்ட ஆட்சியர் ச.கவிதா தகவல்

திருவள்ளூர் அக் 08 : திருவள்ளூர் மாவட்டத்தில் நடப்பாண்டில் பிரதம மந்திரி பயிர் காப்பீட்டுத் திட்டம் அக்ரிகல்சர் இன்சூரன்ஸ் கம்பெனி ஆஃப் இந்தியா லிட் என்ற காப்பீட்டு நிறுவனத்தால் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

2026 சம்பா நெற்பயிருக்கு காப்பீடு கட்டணமாக ஒரு ஏக்கருக்கு ரூ.545 மட்டும் செலுத்தி விவசாயிகள் காப்பீடு செய்து கொள்ளலாம். பயிர் காப்பீடு செய்ய நவம்பர் 15 கடைசி நாளாகும். விவசாயிகள் நிர்ணயிக்கப்பட்ட கடைசி நாளான 15.11.2026க்குள் பயிர் காப்பீடு செய்ய அறிவுறுத்தப்படுகிறது.

நடப்பு ஆண்டில் எல் நினோ காலநிலை காரணமாக மழை பொழிவில் ஏற்றத்தாழ்வுகள் ஏற்பட வாய்ப்பு உள்ளது. அதிகமான வெப்பத்தால் நிலத்தடி நீர் குறையவும் மேலும் சில சமயங்களில் அளவிற்கு அதிகமாக மழை பொழிவும் ஏற்பட வாய்ப்பும் உள்ளது. எனவே, சம்பா பருவத்தில் பயிர் செய்துள்ள நெல் பயிர்கள் மற்றும் இதர பயிர்களுக்கு போதுமான தண்ணீர் கிடைக்காமல் வறட்சியால் மகசூல் பாதிப்பும் அளவிற்கு அதிகமான மழையினால் பயிர் சேதாரமும் ஏற்பட அதிக வாய்ப்பு உள்ளதால் அனைத்து விவசாயிகளும் பயிர் காப்பீடு செய்து பயன்பெறலாம்.

எனவே, சம்பா பருவத்தில் சாகுபடி மேற்கொள்ளும் விவசாயிகள் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்களிலோ / தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளிலோ, பொது சேவை மையங்களிலோ (இ சேவை மையங்கள்) நேரிடையாக, நிர்ணயிக்கப்பட்ட காலக்கெடுவுக்குள் உரிய காப்பீடு கட்டணம் செலுத்தி காப்பீடு செய்து கொள்ளலாம். விவசாயிகள் இத்திட்டத்தின் கீழ் பதிவு செய்யும் போது விண்ணப்பத்துடன் நடப்பு பசலிக்கான அடங்கல், கணினி சிட்டா, வங்கிக் கணக்கு புத்தகத்தின் முதல் பக்க நகல், ஆதார் அட்டை நகல் ஆகியவற்றை இணைத்து காப்பீட்டு கட்டணத் தொகையை செலுத்திய பின் அதற்கான இரசீதையும் இணைக்க வேண்டும். பதிவு செய்த விவரங்கள் அனைத்தும் சரியாக உள்ளதா என விவசாயிகள் உறுதி செய்து கொள்ள வேண்டும். மேலும் விவரங்களுக்கு தங்களது பகுதியில் உள்ள வேளாண்மை விரிவாக்க மையங்களை தொடர்பு கொண்டு பயன் பெறுமாறு திருவள்ளூர் மாவட்ட ஆட்சியர் ச. கவிதா தெரிவித்துள்ளார்.

# திருமழிசை துணைக்கோள் நகர கோட்டம் மற்றும் கீழ்முதலாம்பேடு திட்டம் 2ல் உட்பட்ட மனைகளுக்கான மின்னனு ஒப்பந்தப்புள்ளி மற்றும் மின்னனு ஏலம் 8 ம் தேதி வரை நீட்டிப்பு : மாவட்ட ஆட்சியர் ச.கவிதா தகவல் :

திருவள்ளூர் அக் 08 : தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம், திருமழிசை துணைக்கோள் நகரக்கோட்டத்திற்குட்பட்ட திருவள்ளூர் மாவட்டத்தில் உள்ள செவ்வாப்பேட்டை, பெரியகுப்பம், திரூர், காக்களூர் மற்றும் பெருமாள்பட்டு ஆகிய திட்டப்பகுதிகளில் உள்ள பொது உபயோக மனைகள், கடைமனைகள், வணிகமனை,வழிபாட்டு மனைகளுக்கான (மொத்தம் 72 மனைகள்) மின்னனு ஒப்பந்தப்புள்ளி மற்றும் மின்னனு ஏலத்திற்கு இணையத்தளத்தில் விண்ணப்பம் செய்வதற்கான காலக்கெடு 08.10.2026 முற்பகல் 11 மணியளவில் முடிவடைய உள்ளதால் பொது மக்கள் அனைவரும் இந்த பொன்னான வாய்ப்பை பயன்படுத்தி கொள்ளலாம்.

அதே போல் தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம், சிறப்பு திட்டக் கோட்டம் 1ற்கு உட்பட்ட கீழ்முதலாம்பேடு திட்டம் 2ல் விற்பனையாகாமல் காலியாக உள்ள பொது உபயோக மனை, வணிக பயன்பாட்டு மனை, மழலையர் பள்ளி மனை மற்றும் ஆரம்பப்பள்ளி மனை என மொத்தம் 4 மனைகளை பொது மக்களுக்கு ஏல முறையில் மின்னணு ஒப்பந்தப்புள்ளி மற்றும் மின்னனு ஏலத்திற்கு இணையதளத்தில் விற்பனை செய்வதற்கான காலக்கெடு 08.10.2026 அன்று காலை 11 மணி வரை நீட்டிக்கப்பட்டுள்ளது.

மேலும், இதுகுறித்த விவரங்களை https://tnhb.tn.gov.in மற்றும் https://tntenders/gov/in என்ற இணையதளத்தில் அறிந்து கொள்ளலாம் எனவும் பொதுமக்கள் இப்பொன்னான வாய்ப்பை பெற்று பயன்பெறலாம் என மாவட்ட ஆட்சியர் ச.கவிதா தெரிவித்துள்ளார்.



கிருஷ்ணகிரி நகராட்சி அருள்மிகு வினைதீர்த்த விநாயகர் கோயில் சிவகாமி பழனியானந்தம் இலவச திருமண மண்டபத்தில் சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை, ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சிப் பணிகள் திட்டம் சார்பாக 100 கர்ப்பிணி தாய்மார்களுக்கு சமுதாய வளைகாப்பு நிகழ்ச்சியை மாவட்ட ஆட்சித்தலைவர் தினேஷ்குமார் மற்றும் கிருஷ்ணகிரி சட்டமன்ற உறுப்பினர் பா.முகுந்தன் ஆகியோர் குத்துவிளக்கேற்றி துவக்கி வைத்து கர்ப்பிணி தாய்மார்களுக்கு சீர் வரிசைப் பொருட்களை வழங்கினார்கள். உடன் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்ட அலுவலர் சுமதி, மாவட்ட சமூக நல அலுவலர் சந்தி சுபாசினி, வட்டாட்சியர் ராஜலட்சுமி.



திருவள்ளூர் மாவட்ட ஆட்சியர் வளாகத்தில் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சி திட்டம் (ம) தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் சார்பில் 150க்கும் மேற்பட்ட பணியாளர்கள் கலந்து கொண்ட தேசிய ஊட்டச்சத்து மாத விழிப்புணர்வு பேரணியை மாவட்ட ஆட்சியர் ச.கவிதா கொடியசைத்து துவக்கி வைத்தார். இதில் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார திட்ட இயக்குநர் கவிதா, ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சி திட்ட (பொ) வனிதா, அங்கன்வாடி பணியாளர்கள், மகளிர் சுய உதவிக்குழு உறுப்பினர்கள் மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# அரசு கல்லூரியில் மூத்த குடிமக்கள் நலன் குறித்த விழிப்புணர்வு போட்டிகள்




அறந்தாங்கி., அக்.8– புதுக்கோட்டை மாவட்டம் ஆவுடையார் கோயில் அருகே பெருநாவலூரில் இயங்கி வரும் அறந்தாங்கி அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில், புதுக்கோட்டை மாவட்ட சமூக நலத்துறையின் சார்பில் மூத்த குடிமக்கள் நலன், உரிமைகள் மற்றும் பாதுகாப்பு குறித்த விழிப்புணர்வு கவிதை மற்றும் ஓவியப்போட்டி கல்லூரித் திருவள்ளுவர் அரங்கத்தில் நடைபெற்றது.

கல்லூரி முதல்வர் முனைவர் ரா.சரளா தலைமை தாங்கி, மூத்த குடிமக்களுக்கான நலத்திட்டங்களையும், அவர்களுக்கான உரிமைகள் மற்றும் பாதுகாப்பின் அவசியத்தையும் மாணவர்களிடையே எடுத்துரைத்து தொடங்கி வைத்தார். கல்லூரித் தமிழ்த்துறைத்தலைவர் முனைவர் கா.காளிதாஸ், வணிகவியல் துறைத் தலைவர் முனைவர் கு. சீனிவாசன், புதுக்கோட்டை மாவட்ட சமூக நலத்துறையின் பாலின சிறப்பு வல்லுநர் து.நந்தினி, நிதி கல்வியறிவு வல்லுநர் சி.பிரியா ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

மூத்த குடிமக்கள் நலன் குறித்த விழிப்புணர்வு கவிதை மற்றும் ஓவியப்போட்டியில் 30க்கும் மேற்பட்ட மாணவ மாணவியர் பங்கேற்றனர்.

தமிழ்த்துறைத்தலைவர் முனைவர் கா காளிதாஸ்,வணிகவியல் துறை விரிவுரையாளர் முனைவர் எஸ்.கார்த்திக், ஆங்கிலத்துறை விரிவுரையாளர் தி.சிவராஜன் ஆகியோர் கவிதைப்போட்டிக்கு நடுவர்களாகப் பணியாற்றினர். தமிழ்த் துறை விரிவுரையாளர் முனைவர் சி.மேனகா, கணினி அறிவியல் துறை விரிவுரையாளர் முனைவர் வை. சண்முகப் பிரியா, கணிதவியல் துறை விரிவுரையாளர் க.பாண்டிச்செல்வி ஆகியோர் ஓவியப் போட்டிக்கு நடுவர்களாகப் பணியாற்றினர்.

முன்னதாக கல்லூரி நுண்கலை ஒருங்கிணைப்பாளர் முனைவர் ச.கணேஷ்குமார் வரவேற்றார்.நிறைவாக நாட்டு நலப்பணித்திட்ட அலுவலர் மு. பழனித்துரை நன்றி கூறினார். போட்டி ஏற்பாடுகளை முனைவர் மா.பாலமுருகன், ரா.ராஜலட்சுமி உள்ளிட்ட விரிவுரையாளர்கள் மற்றும் நாட்டு நலப்பணித்திட்ட தன்னார்வ மாணவர்கள் காவிகா, கௌசல்யா, கமலேஷ், கோகுல்ராஜா ஆகியோர் செய்திருந்தனர்.

# சேலம் மேட்டூரில் 3 மாதங்களாக கிராம மக்களை அச்சுறுத்திய சிறுத்தை சிக்கியது.

சேலம் மாவட்டம் மேட்டூர் அருகே கண்ணாமூச்சி வனப்பகுதியில் கடந்த மூன்று மாதங்களாக சிறுத்தை ஒன்று நடமாடி வந்தது.

வனப்பகுதியை ஒட்டிய கிராமங்களில் குடியிருப்புகளில் வளர்க்கப்பட்டு வந்த கோழிகள் ஆடுகள் நாய்கள் பசுவின் கன்றுகளை சிறுத்தை வேட்டையாடியது. இதனால் கிராம மக்கள் அச்சம் அடைந்தனர். மேட்டூர் வனச்சரகர் செங்கோட்டையன் சென்னம்பட்டி வனச்சரகர் ராஜ்குமார் மற்றும் சேலம் ஈரோடு மாவட்டம் வனத்துறையினர் இணைந்து சிறுத்தையை பிடிக்க நடவடிக்கை மேற்கொண்டு வந்தனர். நான்கு



இடங்களில் கூண்டுகள் வைக்கப்பட்டன எட்டு இடங்களில் கண்காணிப்பு கேமராக்கள் பொருத்தப்பட்டன.

நீண்ட நாட்களாக சிறுத்தை பிடிபடாத காரணத்தால் ஆத்திரமடைந்த கிராம மக்கள் ஈரோடு சேலம் மாவட்ட சாலை மறியலில் ஈடுபட்டனர். இதனை அடுத்து சிறுத்தை பிடிக்க சேலம் மாவட்ட ஈரோடு மாவட்ட வனத்துறையினரும் தீவிர முயற்சி மேற்கொண்டனர். நேற்று இரவு கண்ணாமூச்சி வனப்பகுதியை ஒட்டிய மிளகாய் பொதைபகுதியில் வைக்கப்பட்ட கூண்டில் சிறுத்தை சிக்கியது. இந்த சிறுத்தையின் வயது என்ன ஆண் சிறுத்தையா பெண் சிறுத்தையா என்பதை தெரியவில்லை. சிறுத்தை ஆக்ரோஷமாக இருப்பதாகவும் மருத்துவர்கள் வந்த பிறகு அது குறித்து விவரங்கள் தெரியவரும் என்றும் வனத்துறையினர் தெரிவித்தனர்.

# வடமதுரை ஒழுங்குமுறை விற்பனைக்கூடத்தில் கொப்பரை ஏலம்.



வடமதுரை அக்.8

திருச்சி தேசிய நெடுஞ் சாலையில் தங்கம் மாபட்டி கிராமத்தில் அமைந்துள்ள வடமதுரை ஒழுங்குமுறை விற்பனைக்கூடத்தில் கொப்பரை தேங்காய் மற்றும் தேங்காய் தொட்டிக்கான ஏலம் பிரதி வாரம் செவ் வாய்க்கிழமை நேற்று நடைபெற்றது .இந்நிலையில் 06.10.2026 அன்று நடைபெற்ற ஏலத்தில் அய்யலூர், வடமதுரை சுற்று வட்டார விவசாயிகள், உள்ளூர் மற்றும் வெளி மாவட்ட வியாபாரிகள் கலந்துகொண்டனர். இந்த ஏலத்தில் தேங்காய் பருப்பு முதல் தரம் கிலோ ஒன்றிற்கு அதிகபட்ச விலையாக ரூ.149 க்கும் குறைந்தபட்சமாக ரூ.120 க்கும், இரண்டாம் தரம் அதிகபட்ச விலையாக ரூ.120 க்கும் குறைந்தபட்சமாக ரூ.70 க்கும் ஏலம் போனது. மொத்தமாக 446 கிலோ கொப்பரை சுமார் ரூபாய் 66,338/ ஏலம் போனது. இந்த மறைமுக ஏலத்திற்கு அங்காளஈஸ்வரி விற்பனைக்கூட கண்காணிப்பாளர்(பொ) தலைமை வகித்தார். மண்டி ஆய்வாளர் அசோக்குமார் மற்றும் பொன்ராம் ஆகியோர் உடன் இருந்தனர். கூடுதல் விபரங்களுக்கு விற்பனைக்கூட கண்காணிப்பாளர் அவர்களை 9943347233 என்ற எண்ணிற்கு தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப் படுகிறது.

# கிருஷ்ணகிரியில் சர்வதேச முதியோர் தினத்தையொட்டி ஆதரவற்ற மூத்த குடிமக்களுக்கான உடல் மற்றும் மனநலம் குறித்த சிறப்பு முகாமினை மாவட்ட ஆட்சியர் தினேஷ் குமார் குத்துவிளக்கு ஏற்றி துவக்கி வைத்தார்.

கிருஷ்ணகிரி. அக்.8–

கிருஷ்ணகிரி அருகே உள்ள வெங்கடாபுரம் அதியமான் நகரில் போதிமரம் மூத்தோர் பராமரிப்பு இல்லத்தில் சமூக நலத்துறை சார்பில் சர்வதேச முதியோர் தினத்தினை முன்னிட்டு மூத்த குடிமக்களுக்கான உடல் மற்றும் மனநலம் குறித்த சிறப்பு முகாம் நடைப்பெற்றது,



சமூகநலத்து அலுவலர் திருமதி சக்தி சுபாஷினி தலைமையில் நடைப்பெற்ற இந்த விழாவிற்கு சமுக நுகர்வோர் பாதுகாப்பு நலச் சங்கத்தின் மாநில பொதுச் செயலாளர் டாக்டர் சந்திரமோகன் முன்னிலை வகித்தார்.

மேலும் இந்த விழாவிற்கு சிறப்பு அழைப்பாளராக மாவட்ட ஆட்சியர் தினேஷ் குமார் கலந்துக்கொண்டு முகாமினை துவக்கி வைத்து ஆதரவற்ற முதியோர்களுக்கு பொன்னாடை அணிவித்து சர்வதேச முதியோர் தின வாழ்த்துக்களை தெரிவித்துக் கொண்டார். முதியோர் இல்லங்களை சீரிய முறையில் நிர்வகித்து வரும் தொண்டு நிறுவன பிரதிநிதிகளான போதிமரம் அறக்கட்டளை நிர்வாக இயக்குனர் ராஜேஸ்வரி, தென்கனிக்கோட்டை சாரதா முதியோர் இல்ல ஒருங்கிணைப்பாளர் கௌதமன், பியூபிள் ஆக்சன் டிரஸ்ட் பொருளாளர் ஜோதி, கைன்ட் ஆர் சாரிட்டபிள் டிரஸ்ட் நிறுவனர் கமலமூர்த்தி, ஓசூர் பகல்நேர பொழுதுபோக்கு மைய மேலாளர் சிவக்குமார், ஆகியோரை நினைவுப் பரிசு வழங்கி கௌரவிக்கப்பட்டது.

இதனைத்தொடர்ந்து பள்ளி, கல்லூரி, மாணவ, மாணவிகளுக்கு இடையிலான பேச்சு போட்டி, கட்டுரை போட்டி, மற்றும் ஓவியப்போட்டியில் வெற்றி பெற்ற மாணவ, மாணவிக்கு சான்றிதழ் மற்றும் பரிசுகள் வழங்கப்பட்டது.

மேலும் இந்த விழாவில் முதியோர்களை மகிழ்விக்கும் பல்வேறு விதமான இசைநிகழ்ச்சிகள் மற்றும் கலை நிகழ்சிகளும் நடைப்பெற்றது, தொடர்ந்து அனைத்து முதியோர்களுக்கும்

இலவச மருத்துவ சிகிச்சைகளும் மேற்கொள்ளப்பட்டது.

மேலும் இந்த நிகழ்ச்சியில் சமுக நுகர்வோர் நல பாதுகாப்பு சங்கத்தின் மாநில துணைச் செயலாளர் பத்மா, நுகர்வோர் சங்கத்தின் மாவட்டத்லைவர் சிவசக்திவேல், மாவட்ட மகளிர் அணி துணைச் செயலார் பவித்ரா, செய்தி தொடர்பாளர் ஜெய்சன், வடிவேல் உள்ளிட்ட போதிமரம் மூத்தோர் இல்லக்காப்பாளர் உள்ளிட்ட பலர் கலந்துக் கொண்டனர். இறுதியாக மாவட்ட மகளிர் அதிகாரம் மைய ஒருங்கிணைப்பாளர் ராகவி நன்றியுரையாற்றினார்.



கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில தேசிய தன்னார்வ இரத்ததான தினத்தை முன்னிட்டு தேசிய தன்னார்வ இரத்ததான தின உறுதிமொழியை மாவட்ட ஆட்சித்தலைவர் தினேஷ்குமார் தலைமையில் மருத்துவர்கள், அனைத்து துறை அலுவலர்கள் எடுத்துக் கொண்டனர். உடன் மாவட்ட சுகாதார அலுவலர் மரு.ஜெகநாதன் மாவட்ட குருதி பரிமாற்று அலுவலர் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

# கடம்பத்தூர் ஊராட்சி ஒன்றியத்தில் பல்வேறு வளர்ச்சித் திட்ட பணிகள் மாவட்ட ஆட்சியர் ச.கவிதா நேரில் ஆய்வு



திருவள்ளூர் அக் 08 :

திருவள்ளூர் மாவட்டம், கடம்பத்தூர் ஊராட்சி ஒன்றியம், பிரியாங்குப்பம் ஊராட்சியில் மாவட்ட ஆட்சித் தலைவர் ச.கவிதா தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழகம் சார்பில் நேரடி நெல் கொள்முதல் நிலையத்தை நேரில் ஆய்வு மேற்கொண்டு, விவசாயிகளின் நெல் வரவு, பதிவேடுகள் மற்றும் இயந்திரங்கள் தொடர்பாக விபரங்களை கேட்டறிந்து, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை சார்பில், பசுமை தமிழ்நாடு இயக்கத்தில் நாற்றங்கால் பண்ணையில் மரக்கன்றுகள் வளர்ப்பு பணிகள் தொடர்பாகவும், ஊரக வேலை உறுதி திட்டத்தின் கீழ் குளம் அமைக்கும் பணிகளையும், ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளியில், பள்ளி சமையலறைக் கூடத்தை பார்வையிட்டு, சமையலறைக் கூடங்களை சுத்தமாகவும், சுகாதாரமாகவும் பராமரிக்க வேண்டும் என அறிவுறுத்தினார்.

அதனைத் தொடர்ந்து, விடையூர் பகுதியில் கூட்டுறவு நியாய விலை கடையில் மாவட்ட ஆட்சியர் உணவுப் பொருட்களின் இருப்பு குறித்து நேரில் ஆய்வு மேற்கொண்டு, விவரங்களை கேட்டறிந்து, திருவள்ளூர் பெரியகுப்பம் ஜே.என் சாலை அரசு மருத்துவமனை மருத்துவக்கல்லூரியில் மருத்துவம் (ம) மக்கள் நல்வாழ்வுத்துறை சார்பில், தாய்மாமன் தங்க மோதிரம் திட்டம் தொடர்பாக நேரில் ஆய்வு மேற்கொண்டு, பதிவேடுகள் முறையாக பராமரிக்கப்படுவது குறித்த விவரங்களை கேட்டறிந்தார்.

இதில் துணை ஆட்சியர் (பயிற்சி) ச.சபரி கிருஷ்ணன், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழக மண்டல மேலாளர் வி.ராஜேஷ், திருவள்ளூர் வட்டாட்சியர் சரண்யா, வட்ட வழங்கல் அலுவலர் (திருவள்ளூர்) விஜய் ஆனந்த், மருத்துவர்கள், செவிலியர்கள் மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# பழநி ரூ.100 கோடி நில மோசடி: தலைமறைவாக இருந்த பத்திர எழுத்தர் உட்பட 2 பேர் கைது

திண்டுக்கல்: அக்.8–

பழநியில் ரூ.100 கோடி நிலமோசடி வழக்கில் கடந்த 2 மாதமாக தலைமறைவாக இருந்த பத்திர எழுத்தர் உட்பட 2 பேரை சிபிசிஐடி போலீஸார் கைது செய்தனர்.

திண்டுக்கல் மாவட்டம் பழநி அடிவாரம் பகுதியில் உள்ள தண்டபாணி சுவாமிகள் மடத்துக்கு சொந்தமான ரூ.100 கோடி மதிப்புள்ள நிலம் ரூ.2 கோடிக்கு சட்ட விரோதமாக 2 தனி நபர்களுக்கு பத்திரப்பதிவு செய்யப்பட்டது.

இது தொடர்பாக 88 பேரிடம் விசாரணை நடத்திய சிபிசிஐடி போலீஸார் 11 பேர் மீது வழக்குப்பதிவு செய்தனர். இவ்வழக்கில் தொடர்புடைய சார் பதிவாளர் ஜஸ்டின் மணிகண்டன், முருகதாஸ், இடைத்தரகர் ஜெயப்பிரகாஷ் உட்பட இதுவரை 6 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். அதில், வழக்கறிஞர் அன்வர்தீன் சிறையிலேயே உயிரிழந்தார்.

இந்த வழக்கில் சம்பந்தப்பட்ட பத்திர எழுத்தர் சிவக்குமார் உட்பட 5 பேர் தலைமறைவாக இருந்தனர். அவர்கள் குறித்த எந்தத் தகவலும் தெரிய வராததால் போலீஸாரால் அவர்களை நெருங்க முடியவில்லை.

அதனால் கடந்த 2 மாதமாக அந்த 5 பேரையும் கண்டுபிடிக்க முடியாமல் சிபிசிஐடி போலீஸார் திணறி வந்தனர். இதேபோல், இந்த மோசடிக்கு மூளையாக செயல்பட்ட முக்கிய புள்ளி குறித்தும் ஆதாரப்பூர்வமான தகவல்கள் எதுவும் இதுவரை கிடைக்கவில்லை.

அதே நேரத்தில் இந்த மோசடி தொடர்பாக முக்கிய குற்றவாளிகள் அனைவரையும் கைது செய்துவிட்டதால், இதுவரை நடத்திய விசாரணை அடிப்படையில் குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யவும் சிபிசிஐடி போலீஸார் திட்டமிட்டிருந்தனர்.

இந்நிலையில் புதன்கிழமை (அக்.7) காலை, பத்திரப்பதிவுக்கு உடந்தையாக இருந்த பதிவுத்துறை இளநிலை உதவியாளர் சிவசங்கரி, கடந்த 2 மாதமாக தலைமறைவாக பத்திர எழுத்தர் சிவக்குமார் ஆகிய 2 பேரையும் அவர்களது வீடுகளில் வைத்து சிபிசிஐடி போலீஸார் கைது செய்து விசாரணை நடத்தி வருகின்றனர். இந்த மோசடி தொடர்பாக ஏற்கெனவே இளநிலை உதவியாளர் சிவசங்கரி பணியிடை நீக்கம் செய்யப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

# குழந்தைகளை தத்து கொடுக்க ஆட்சேபனை இருப்பின் தகவல் தெரிவிக்கலாம் : திருவள்ளூர் மாவட்ட ஆட்சியர் ச.கவிதா தகவல்



திருவள்ளூர் அக் 8 :

திருவள்ளூர் மாவட்டம், திருவேற்காடு, தேவி நகர், 8வது தெரு எண்:13 என்ற முகவரியில் வசித்து வந்த ஜெயக்குமார் மற்றும் காஞ்சனாமாலா என்பவர்களின் மகள் சர்மிளா (4) என்ற குழந்தையை பராமரிக்க இயலாத காரணத்தால் கடந்த 11.01.2013 அன்று சென்னை, கெல்லீஸ் குழந்தைகள் நலக் குழு மூலம் குழந்தை சர்மிளா "பாலமந்திர்" சிறப்பு தத்து மையத்தில் தற்காலிகமாக ஒப்படைக்கப்பட்டு, இல்லத்தில் குழந்தை பராமரிக்கப்பட்டு வந்த நிலையில் குழந்தையை தாயார் ஒரு முறை மட்டும் பார்க்க வந்துள்ளனர்.

அதே போல் திருவள்ளூர் மாவட்டம் கும்மிடிப்பூண்டி ரெட்டம்பேடு சந்திப்பு பகுதியில் வசித்து வந்த நவீன் குமார் மற்றும் துர்கா என்பவர்களின் 15 நாட்கள் ஆன ஆண் குழந்தை குப்பைத் தொட்டியில் பெற்றோரால் கைவிடப்பட்ட நிலையில் காணப்பட்டுள்ளது. இது குறித்து பொதுமக்கள் Child Helpline 1098க்கு புகார் அளித்ததின் பேரில், குழந்தை மீட்கப் பட்டு கும்மிடிப்பூண்டி அரசு மருத்துவமனையில் முதல் சிகிச்சைக்கு பின்னர் பொன்னேரி அரசு மருத்துவமனையில் தொடர் சிகிச்சை மேற்கொள்ளப்பட்டு, அதனை தொடர்ந்து குழந்தை சென்னை ஸ்டான்லி அரசு மருத்துவமனையில் மேல் சிகிச்சை முடிந்து மருத்துவமனையில் இருந்து குழந்தை டிஸ்சார்ஜ் செய்யப்பட்டு திருவள்ளூர் குழந்தைகள் நலக்குழு வாயிலாக சிறப்பு தத்து மையத்தில் தாற்காலிகமாக தங்க வைக்கப்பட்டுள்ளது.

அதன் பின்னர் இந்த இரு குழந்தைகளையும் இந்நாள் வரை பெற்றோர் பார்க்க வரவில்லை. இக்குழந்தைக் குரியவர்கள் யாரேனும் இருப்பின் தங்கள் ஆட்சேபனையை இவ்வறிவிப்பு வெளியான நாளிலிருந்து 15 நாட்களுக்குள், வ.எழிலரசி மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலுவலர், மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலகு, எண்.118, 'ஞி;' பிளாக், முதல் தளம், மாவட்ட ஆட்சியரகம், திருவள்ளூர் 602 001 தொலைபேசி எண் 044 ரு 27665595, 6382614050 என்ற முகவரியில் தெரியப்படுத்தலாம்.

இக்குழந்தைகளை குறிப்பிட்ட காலக்கெடுவிற்குள் ஆட்சேபனை ஏதும் தெரிவிக்கப்படாத பட்சத்தில், குழந்தையை தத்தெடுப்பதற்காக சட்ட ரீதியாக தகுதி பெற்ற குழந்தையாக அறிவிப்பதில் எந்தவித ஆட்செபனையும் இல்லை என்று கருதப்பட்டு, தத்தெடுப்பு விதிகளின் படி, குழந்தையை தத்தெடுப்பதற்காக சட்ட ரீதியாக தகுதி பெற்ற குழந்தையாக அறிவிப்பதற்கான தேவையான மேல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்று மாவட்ட ஆட்சியர் ச.கவிதா அறிவித்துள்ளார்.

# அகரம் கூட்ரோட்டில் நாகரசம்பட்டி காவல்துறையினர் பொது மக்களிடம் விழிப்புணர்வு



கிருஷ்ணகிரி. அக். 8–

கிருஷ்ணகிரி மாவட்டம், போச்சம்பள்ளி அருகே அகரம் கூட்ரோடு பகுதியில் "டீக்கடை பெஞ்ச்" என்ற தலைப்பில் நாகரசம்பட்டி காவல்துறையினர் பொதுமக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தினர். சிறப்பு காவல் உதவி ஆய்வாளர் காளியப்பன் பொதுமக்களிடையே வாகனங்களில் பயணிக்கும் போது கட்டாயம் தலைக்கவசம் அணிந்து செல்ல வேண்டும் என்றும், சாலை பாதுகாப்பு விதிகளை முறையாக கடைபிடிக்க வேண்டும் என்றும் நாகரசம்பட்டி காவல்துறையினர் அறிவுறுத்தினர்.

மேலும், போதைப் பொருள் இல்லாத தமிழகத்தை உருவாக்குவது, தங்கள் பகுதியில் போதைப்பொருட்களின் விற்பனை மற்றும் பயன்பாட்டை தடுப்பதில் பொதுமக்களும் காவல்துறைக்கு ஒத்துழைக்க வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டனர்.

தொடர்ந்து, குழந்தை திருமணத்தை தடுப்பது குறித்தும் பொது மக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது.

போதைப்பொருள் தடுப்பு, சாலை பாதுகாப்பு மற்றும் குழந்தை திருமணத் தடுப்பு உள்ளிட்ட சமூக நலன் சார்ந்த விஷயங்களில் பொதுமக்கள் விழிப்புணர்வுடன் செயல்பட வேண்டும் என நாகரசம்பட்டி சிறப்பு உதவி காவல் ஆய்வாளர் காளியப்பன் அவர்கள் வலியுறுத்தினர்.

இதன்மூலம் அகரம் கூட்ரோடு பகுதியில் பொதுமக்களிடையே பல்வேறு சமூக விழிப்புணர்வு கருத்துகள் எடுத்துரைக்கப்பட்டன.

# சாமல்பட்டி அம்பேத்கர் நகரில் மழைநீர் தேக்கம்

## குண்டும் குழியுமான சாலையை சீரமைக்க பொதுமக்கள் கோரிக்கை



கிருஷ்ணகிரி மாவட்டம், சாமல்பட்டி அம்பேத்கர் நகரில் திங்கட்கிழமை இரவு பெய்த கனமழையால், பல ஆண்டுகளாக குண்டும் குழியுமாக காணப்படும் சிமெண்ட் சாலையில் மழைநீர் தேங்கி பொதுமக்கள் அவதிக்குள்ளாகினர்.

சாலையில் நீர் தேங்குவதால் டெங்கு, மலேரியா உள்ளிட்ட காய்ச்சல்கள் பரவும் அபாயம் உள்ளதாக பொதுமக்கள் தெரிவித்தனர். இதுகுறித்து ஊராட்சி மன்ற கிளை மேலாளர் மாதேஷ் இடம் பலமுறை கோரிக்கை விடுத்தும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை எனவும் புகார் தெரிவித்தனர்.

எனவே, பல ஆண்டுகளாக சீரமைக்கப்படாத சிமெண்ட் சாலையை உடனடியாக புதுப்பித்து, மழைநீர் தேங்காத வகையில் நடவடிக்கை எடுக்க வேண்டும் என அம்பேத்கர் நகர் பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# போச்சம்பள்ளி அருகே ஆவத்துவாடி ஊராட்சி உட்பட்ட நாகலேரி ஏரியில் கொட்டப்படும் குப்பைகள்

## மாசடையும் நீரால் விவசாயிகள் மற்றும் பொதுமக்கள் வேதனை.

கிருஷ்ணகிரி. அக்.8–

கிருஷ்ணகிரி மாவட்டம், போச்சம்பள்ளி அருகே உள்ள ஆவத்துவாடி ஊராட்சிக்கு உட்பட்ட நாகலேரி, ஏரி சுமார் 36 ஏக்கர் பரப்பளவில் அமைந்து ஊரின் முக்கிய நீர் ஆதாரமாக திகழ்ந்து வருகிறது. இந்த ஏரியின் நீர் மூலமாக அப்பகுதியில் உள்ள சுமார் 500க்கும் மேற்பட்ட ஏக்கர் விவசாய நிலங்கள் பாசன வசதி பெற்று வருகின்றன.



இந்நிலையில், ஆவத்துவாடி ஊராட்சியின் பல்வேறு பகுதிகளில் சேகரிக்கப்படும் பிளாஸ்டிக் கழிவுகள் மற்றும் ஊரமைப்புக் குப்பைகளை ஊராட்சி நிர்வாகம் சார்பிலேயே நாகலேரி பகுதியில் கொட்டி வருவதாக அப்பகுதி விவசாயிகள் குற்றம் சாட்டுகின்றனர். தொடர்ந்து ஏரிப் பகுதியில் கழிவுகள் கொட்டப்பட்டு வருவதால், ஏரியின் நீர் கடுமையாக மாசடைந்து துர்நாற்றம் வீசும் நிலைக்குத் தள்ளப் பட்டுள்ளது. இதனால், அப்பகுதியில் மேய்ச்சலுக்கு வரும் ஆடு, மாடு போன்ற கால்நடைகள் ஏரி நீரைக் குடிக்க முடியாத அவலநிலை ஏற்பட்டுள்ளது. ஏற்கனவே விவசாயத்திற்குப் பயன்படும் முக்கிய ஏரியாக இது உள்ளது. தற்போது கழிவுகள் கொட்டப்படுவதால் நீர் நஞ்சாகி வருகிறது. இதே நிலை தொடர்ந்தால், வரும் நாட்களில் கால்நடைகளுக்குக் குடிநீர் கூட கிடைக்காத நிலை உருவாகும். நிலத்தடி நீரும் பாதிக்கப்பட்டு, விவசாயமும் முற்றிலுமாகப் பாழாகும் அபாயம் உள்ளது. என்று அப்பகுதி விவசாயிகள் மிகுந்த வேதனையுடன் தெரிவித்தனர்.எனவே, ஏரி நீர் மேலும் பாழடைவதைத் தடுக்கும் பொருட்டு, ஊராட்சி நிர்வாகம் உடனடியாகத் தலையிட்டு நாகலேரி ஏரியில் குப்பை கொட்டுவதைத் தடை செய்ய வேண்டும் என்றும், குப்பைகளைச் சேகரித்து அகற்றுவதற்கு மாற்று இடத்தை ஏற்படுத்தித் தர வேண்டும் என்றும் அப்பகுதி விவசாயிகள் மற்றும் பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# டிஎன்பிஎஸ்சி குரூப் 4 தேர்வுக்கான அறிவிப்பாணையை திருத்தி வெளியிடுக” தினகரன்

சென்னை: அக்.8–

“காலிப் பணியிடங்களை நிரப்பும் வகையில் டிஎன்பிஎஸ்சி குரூப் 4 தேர்வுக்கான அறிவிப்பாணையைத் திருத்தி வெளியிட வேண்டும்” என்று அமமுக பொதுச்செயலாளர் டிடிவி தினகரன் வலியுறுத்தியுள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள சமூக வலைதள பதிவில், “காலிப் பணியிடங்கள் லட்சக்கணக்கில் இருக்கும்போது, அவற்றை நிரப்புவதற்கான அறிவிப்பை சொற்ப எண்ணிக்கையில் வெளியிடுவதா? அதிகப்படியான காலிப் பணியிடங்களை நிரப்பும் வகையில் டிஎன்பிஎஸ்சி குரூப் 4 தேர்வுக்கான அறிவிப்பாணையைத் திருத்தி வெளியிட வேண்டும்.

கிராம நிர்வாக அலுவலர், இளநிலை உதவியாளர், தட்டச்சர், வரி வசூலிப்போர் உள்ளிட்ட தமிழ்நாடு அரசின் பல்வேறு துறைகளில் உள்ள 46 வகையிலான பணிகளுக்கு 6,574 காலிப் பணியிடங்களை நிரப்புவதற்கான அறிவிப்பாணையை தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் வெளியிட்டுள்ளது.

தமிழகத்தில் சுமார் 15 லட்சம் தேர்வர்கள் எதிர்கொள்ள வாய்ப்பிருக்கும் டிஎன்பிஎஸ்சி குரூப் 4 தேர்வுக்கு வெறும் 6,574 காலிப்பணியிடங்களை அறிவித்திருப்பது, அரசுப் பணி கனவில் அத்தேர்வை நீண்ட நாட்களாக எதிர்பார்த்து இரவு பகலாகத் தயாராகிக் கொண்டிருக்கும் தேர்வர்கள் மத்தியில் கடும் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது.

அரசுத் துறைகளில் நிலவும் அனைத்து காலிப் பணியிடங்களும் விரைந்து நிரப்பப்படும் என வாக்குறுதியளித்து ஆட்சிக்கு வந்த தவெக, லட்சக்கணக்கான காலிப்பணியிடங்கள் நிலவும் தமிழக அரசில் 6,574 பணியிடங்களை நிரப்புவதற்கு மட்டும் அறிவிப்பாணையை வெளியிட்டிருப்பது, கடல் அளவு தேவைக்கு கடுகளவு உதவுவது போல அமைந்துள்ளது.

வேலைவாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்து காத்திருக்கும் பட்டதாரிகளுக்கு 4 ஆயிரம் ரூபாய் உதவித்தொகை, கிராம மற்றும் நகர்ப்புற உள்ளாட்சிகளில் 5 லட்சம் இளைஞர்களுக்கு நிரந்தரப் பணி என வேலைவாய்ப்பு சம்பந்தமாக தவெக கொடுத்த வாக்குறுதிகளில் ஒன்றைக்கூட நிறைவேற்ற தற்போதுவரை நடவடிக்கை எடுக்காத நிலையில், டிஎன்பிஎஸ்சி குரூப் 4 தேர்வுக்கான பணியிடங்களையும் சொற்ப அளவிற்கு குறைத்திருப்பது கடும் கண்டனத்திற்குரியது.

எனவே, தமிழ்நாடு அரசுத் துறைகளில் நிலவும் காலிப்பணியிடங்களை விரைந்து நிரப்பிடும் வகையிலும், தேர்வுக்குத் தயாராகிக் கொண்டிருக்கும் தேர்வர்களுக்கு வேலைவாய்ப்பை வழங்கிடும் வகையிலும், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் வெளியிட்டிருக்கும் குரூப் 4 தேர்வுக்கான அறிவிப்பைத் திருத்தி, அதிகப்படியான காலிப் பணியிடங்களுடன் கூடிய புதிய அறிவிப்பாணையை வெளியிட வேண்டும் என தவெக அரசை வலியுறுத்துகிறேன்” என்று தினகரன் கூறியுள்ளார்.

# ஸ்மார்ட் மீட்டர் கொள்முதல் செய்வதற்கான ஒப்பந்த அறிவிப்பை வெளியிட்டது மின்வாரியம்

சென்னை: அக்.8–

ஸ்மார்ட் மீட்டர் கொள்முதல் செய்வதற்கான ஒப்பந்த அறிவிப்பை மின்வாரியம் வெளியிட்டது. முன்பணம் செலுத்தும் வகையிலான ஸ்மார்ட் மின் மீட்டர்களை கொள்முதல் செய்ய திட்டமிட்டுள்ளது.டிக்கெட் புக்

சென்னை உட்பட தமிழ்நாட்டின் மிக முக்கியமான நகரங்களில் முன்பணம் செலுத்தக்கூடிய (Prepaid) ஸ்மார்ட் மீட்டர்களைப் பொருத்துவதற்காக, மின் பகிர்மான கழகத்தின் சார்பாக டெண்டர் அறிவிக்கப்பட்டது. குறிப்பாக, தமிழ்நாட்டில் ஸ்மார்ட் மீட்டர் திட்டம் விரிவுபடுத்தப்படுமா அல்லது ரத்து செய்யப்படுமா? அதற்கான அறிவிப்புகள் வருமா என்ற கேள்வி இருந்த நிலையில், மத்திய அரசின் மறுசீரமைக்கப்பட்ட விநியோகத்துறை திட்டத்தின் கீழ், சென்னை உள்ளிட்ட பல்வேறு முக்கிய நகரங்களில் வீடுகள் மற்றும் வணிக நிறுவனங்களுக்குப் புதிய ஸ்மார்ட் மீட்டர்கள் மற்றும் மின் மீட்டர்கள் பொருத்துவதற்கான ஒப்பந்தப் புள்ளியை மின்வாரியம் கோரியுள்ளது.”

இந்தத் திட்டத்தின் கீழ், பொதுமக்கள் பயன்படுத்தும் மின்சாரத்தைத் துல்லியமாகக் கணக்கிடவும், மொபைல் ரீசார்ஜ் செய்வது போல முன்கூட்டியே கட்டணம் செலுத்தும் முறையை நடைமுறைப்படுத்தவும் மின்சார வாரியம் திட்டமிட்டு வருகிறது. இதற்காக, தனியார் சேவை நிறுவனங்களை நியமிப்பதற்கான டெண்டர் அறிவிக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக சென்னை மட்டுமில்லாமல் காஞ்சிபுரம், திருவண்ணாமலை, வேலூர், விழுப்புரம் மற்றும் தென் மாவட்டங்களான கோவை, ஈரோடு, கரூர், தஞ்சாவூர், திருச்சி, மதுரை, திருநெல்வேலி ஆகிய நகரங்களின் மாநகராட்சிப் பகுதிகளிலும் நவீன ஸ்மார்ட் மீட்டர்களைப் பொருத்துவதற்கான அறிவிப்புகள் வெளியாகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

நுகர்வோருக்கான ஸ்மார்ட் மீட்டர்கள் தவிர, மின் விநியோக மின்மாற்றிகளில் (டிரான்ஸ்பார்மர்களில்) ஏற்படும் மின் இழப்பைத் துல்லியமாகக் கண்காணிப்பதற்கான பிரத்யேக ஸ்மார்ட் மீட்டர்களும் இத்திட்டத்தின் ஒரு பகுதியாக அறிவிக்கப்பட்டுள்ளன. இதற்கான விவரங்களை இணையதளங்கள் (வெப்சைட்டுகள்) மூலம் பதிவிறக்கம் செய்து சமர்ப்பிப்பதற்கான கடைசித் தேதி உள்ளிட்ட அனைத்து விவரங்களையும் தெரிந்து கொள்ளலாம் என்று மின்சார வாரியம் அறிவித்துள்ளது



கிருஷ்ணகிரி மாவட்டம், காவேரிப்பட்டினம் அருகே உள்ள ஆவத்துவாடி ஊராட்சியில் பொதுமக்களின் குடிநீர் தேவைக்காக பயன்படுத்தப்பட்டு வரும் தென்பெண்ணை ஆற்றங்கரையிலுள்ள உறை கிணறு பாதுகாப்பற்ற மேல்மூடி இல்லாத நிலையில் இருப்பதாக சமூக ஆர்வலர்கள் கவலை தெரிவித்துள்ளனர். குடிநீர் எடுக்கப்படும் இந்த உறை கிணற்றின் மேற்பகுதியில் பாதுகாப்பு மூடி இல்லாததால், குப்பைகள், விலங்குகள் மற்றும் வெளிப்புற கழிவுகள் கிணற்றுக்குள் விழும் அபாயம் இருப்பதாக கூறப்படுகிறது. இதனால் குடிநீரின் தூய்மை பாதிக்கப்பட்டு, பொதுமக்களுக்கு சுகாதார சீர்கேடு மற்றும் தொற்று நோய்கள் ஏற்படும் சூழல் உருவாகலாம் என எச்சரிக்கப்படுகிறது. எனவே, சம்பந்தப்பட்ட ஊராட்சி நிர்வாகமும் குடிநீர் வடிகால் வாரிய அதிகாரிகளும் உடனடியாக ஆய்வு மேற்கொண்டு, உறை கிணற்றிற்கு பாதுகாப்பு மூடி அமைத்து, குடிநீரின் தரத்தை பரிசோதித்து பொதுமக்களின் நலனை உறுதி செய்ய வேண்டும் என்று சமூக ஆர்வலர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# புரட்டாசி மாதம் மகாளய அமாவாசையை முன்னிட்டு சதுரகிரி மலை கோவில் செல்ல இன்று முதல் 4 நாட்கள் அனுமதி!

விருதுநகர்: அக்.8–

விருதுநகர் மாவட்டத்தில் வத்திராயிருப்பு அருகே மேற்கு தொடர்ச்சி மலை உச்சியில் மிகவும் புகழ் வாய்ந்த சதுரகிரி சுந்தர மகாலிங்கம் கோவில் அமைந்துள்ளது. இந்த கோவிலில் வழிபட தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் இருந்து மக்கள் வருகின்றனர். சதுரகிரி மலை சித்தர்களின் சொர்க்க பூமி என அழைக்கப் படுகிறது. இந்த மலைக்கு செல்ல அனைத்து நாட்களிலும் அனுமதி வழங்கப் படாது. அமாவாசை, பவுர்ணமி, பிரதோஷம் போன்ற குறிப்பிட்ட நாட்களில் மட்டுமே பக்தர்கள் மலையேறி சென்று சாமி தரிசனம் செய்ய அனுமதி வழங்கப் படும். அதிலும் குறிப்பாக ஆடி, தை, புரட்டாசி மகாளய அமாவாசை அன்று ஆயிரக் கணக்கான பக்தர்கள் சதுரகிரி மலைக்கு வருவார்கள்.

இந்த ஆண்டு புரட்டாசி மகாளய அமாவாசை வரும் அக்டோபர் 10ம் தேதி வருகிறது. எனவே இதனை முன்னிட்டு, பக்தர்கள் (அக்.8) முதல் 11ஆம் தேதி வரை சதுரகிரி மலையேறி சுந்தர மகாலிங்கம் கோவிலில் சாமி தரிசனம் செய்ய வனத்துறையினர் அனுமதி அளித்துள்ளனர். மகாளய அமாவாசை என்பதால் பல்லாயிரக் கணக்கான பக்தர்கள் வருவார்கள் என எதிர்பார்க்கப் படுகிறது.

# பத்திரப்பதிவில் உயிருடன் இருப்பதாக சான்றிதழ் வழங்க வெளிநாட்டில் வசிப்பவர்களுக்கான காலக்கெடு நீட்டிப்பு

சென்னை: அக்.8–

பதிவுத்துறை அலுவலகம் சார்பில் அனைத்து சார்பதிவாளர்களுக்கு அனுப்பப்பட்டுள்ள சுற்றறிக்கை: பொது அதிகார ஆவணத்தின் (Power of Attorney) அடிப்படையில் முகவர் மூலம் சொத்துகளைப் பதிவு செய்யும்போது, அதிகாரம் அளித்தவர் உயிருடன்தான் உள்ளார் என்பதற்கான சான்று (Life Certificate) தாக்கல் செய்வது கட்டாயம். இந்த சான்று ஆவணம் பதிவுக்கு தாக்கல் செய்யப்படும் தேதிக்கு அதிகபட்சம் 30 நாட்களுக்கு முன்பாக பெற்றிருக்க வேண்டும் என்பது இதுவரை நடைமுறையில் இருந்து வந்தது.

ஆனால், வெளிநாடுகளில் வசிப்பவர்கள் அங்குள்ள இந்திய தூதரகம் அல்லது நோட்டரி வழக்கறிஞரிடம் நேரம் ஒதுக்கி இந்த சான்றைப் பெற்று, அதை தபால் மூலம் இந்தியாவுக்கு அனுப்பி வைப்பதற்குள் 30 நாட்களுக்கு மேல் ஆகிவிடுகிறது. இதனால் ஆவணங்களைப் பதிவு செய்வதில் சிக்கல் ஏற்படுவதாக பொதுமக்கள் தரப்பில் தொடர்ந்து கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டன.

இதையேற்று சில தளர்வுகள் வழங்கப்பட்டுள்ளன. அதன்படி வெளிநாட்டில் இருந்து எழுதிக் கொடுக்கப்பட்ட பொது அதிகாரத்தை பயன்படுத்திப் பதிவுக்குத் தாக்கல் செய்யப்படும் ஆவணங்களுக்கு மட்டும் இந்தச் சலுகை பொருந்தும். இத்தகைய ஆவணங்களுக்கு, பொது அதிகாரம் வழங்கியவர் உயிருடன் உள்ளார் என்பதற்கான சான்று, ஆவணம் எழுதிக் கொடுக்கப்பட்ட தேதிக்கு முன் 60 நாட்களுக்குள் வழங்கப்பட்டிருந்தால் போதுமானது.

இந்த சலுகை உள்ளூரில் வழங்கப்படும் மற்ற அதிகார ஆவணங்களுக்கு இது பொருந்தாது. இந்த புதிய அறிவுறுத்தல்களை எவ்வித தவறுமின்றி பின்பற்றுவதை உறுதி செய்ய வேண்டும். தணிக்கையின் போது மாவட்டப் பதிவாளர்கள் இதை சரியாகக் கண்காணிக்க வேண்டும். இவ்வாறு கூறப்பட்டுள்ளது.

# பெற்றோர்களே உஷார் சேலத்தில் 10ஆம் வகுப்பு மாணவனின் சோக முடிவு கதறி அழும் பெற்றோர்.

சேலம் மாவட்டம் ஆத்தூர் அருகே உள்ள ஜோதி நகர் பகுதியைச் சேர்ந்த 14 வயது பள்ளி மாணவன் ஒருவர், செல்போன் பயன்பாட்டினால் ஏற்பட்ட விபரீதத்தால் தனது உயிரை மாய்த்துக்கொண்ட சம்பவம் அப்பகுதியில் பெரும் சோகத்தை




ஏற்படுத்தியுள்ளது.

சேரு மற்றும் ஹசீனா தம்பதியரின் மகனான ரியாஸ்கான், அப்பகுதியில் உள்ள அரசு உதவிபெறும் பள்ளி ஒன்றில் பத்தாம் வகுப்பு பயின்று வந்துள்ளார்.

பள்ளி முடிந்து வீட்டிற்கு வந்தவுடனும், விடுமுறை நாட்களிலும் படிப்பில் சிறிதும் கவனம் செலுத்தாமல், இந்த சிறுவன் எப்போதும் செல்போனிலேயே மூழ்கிக்கிடந்ததாகக் கூறப்படுகிறது. இந்த அதீத செல்போன் மோகத்தால், அவரது பெற்றோர் அடிக்கடி அவரை எச்சரித்து வந்துள்ளனர். சம்பவத்தன்று மாலையில் வழக்கம்போல் நீண்ட நேரமாக செல்போனைப் பார்த்துக்கொண்டிருந்த சிறுவனை, அவரது தாய் செல்போன் பயன்படுத்தக்கூடாது என கடுமையாகக் கண்டித்துள்ளார்.

தாயின் இந்த கண்டிப்பால் மிகுந்த மனமுடைந்த அந்த மாணவன், வீட்டில் யாரும் இல்லாத சமயத்தில் தனியறையில் தூக்கிட்டுத் தற்கொலை செய்துகொண்டார். அக்கம்பக்கத்தினர் உதவியுடன் ஆத்தூர் அரசு மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்ட நிலையில், அவர் ஏற்கனவே உயிரிழந்துவிட்டதாக மருத்துவர்கள் தெரிவித்தனர். இந்த துயர சம்பவம் குறித்து ஆத்தூர் நகர காவல்துறையினர் வழக்குப்பதிவு செய்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.



திண்டுக்கல் மாவட்டம் வேடசந்தூர் வட்டம், எரியோடு பேரூராட்சியிலுள்ள பாறைகுளம் பகுதிகளில் கம்பி வேலி அமைத்து பாதுகாப்பு பணிகள் மேற்கொள்வது தொடர்பாக மாவட்ட ஆட்சித்தலைவர் துர்காமூர்த்தி, நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். உடன் வேடசந்தூர் வட்டாட்சியர் ராஜேந்திரன், வட்டார வளர்ச்சி அலுவலர் கற்பகம், உதவி பொறியாளர் ஊருாட்சி பாலன் உட்பட பலர் உள்ளனர்.

# சேலம் அருகே சாயப்பட்டறையில் இருந்து திடீரென ரசாயன கசிவு: 50 பேருக்கு மூச்சுத்திணறல்

சேலம்: அக்.8–

சேலத்தில் சாயப் பட்டறையில் இருந்து திடீரென ரசாயன கசிவு ஏற்பட்டதால் 50 பேர் பாதிக்கப்பட்டு மூச்சுத்திணறல் ஏற்பட்டது.

சேலம் மாநகராட்சி 47வது வார்டு குகை தெற்கு முனியப்பன் கோவில் தெருவில் பத்ரிநாதன் என்பவருக்கு சொந்தமான சாயப்பட்டறை உள்ளது. இங்கு ஜவுளிகளுக்கு தேவையான துணி நூல்களுக்கு சாயமிடும் பணிகள் நடந்து வருகிறது. இந்த பட்டறையில் 10க்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் வேலை செய்து வருகிறார்கள். நேற்று இரவு வழக்கம் போல் தொழிலாளர்கள் நூல்களுக்கு சாயமிடுவதற்காக ஹைட்ரோ குளோரிக் என்ற ரசாயனம் கலந்து வேலையில் ஈடுபட்டு கொண்டிருந்தனர்.

அப்போது, சாயப்பட்டறையில் இருந்து ரசாயனம் (ஆசிட்) திடீரென கசிய தொடங்கியது. இதனால் தொழிலாளர்களுக்கு மூச்சுத்திணறல் ஏற்பட்டு வெளியே ஓடிவந்தனர். சாயப்பட்டறை அருகில் உள்ள குடியிருப்புகளுக்குள் ரசாயனம் கசிந்ததால் வீடுகளில் இருந்த பொதுமக்கள் சுமார் 50க்கும் மேற்பட்டவர்களுக்கு கண் எரிச்சல் மற்றும் மூச்சுதிணறல் ஏற்பட்டது. இது தொடர்பாக அப்பகுதி பொதுமக்கள் செவ்வாய்பேட்டை தீயணைப்பு நிலையத்திற்கு தகவல் தெரிவித்தனர். அதன்பேரில் தீயணைப்பு வீரர்கள் சம்பவ இடத்திற்கு வந்து சாயப்பட்டறைக்குள் சென்று தண்ணீரை பீய்ச்சி அடித்து ரசாயன கசிவை கட்டுப்படுத்தினர்.

மேலும், செவ்வாய் பேட்டை போலீசாரும் அங்கு வந்து விசாரணை நடத்தினர். இதனிடையே, அந்த பகுதியில் வசிக்கும் பொதுமக்கள், அடிக்கடி இது போன்று சாயப்பட்டறையில் இருந்து ரசாயன கசிவு ஏற்படுவதாகவும், இதனால் கண் எரிச்சல், மூச்சு திணறல் ஏற்படுவதகாவும் புகார் தெரிவித்தனர். இதனை தொடர்ந்து சாயப் பட்டறை மாசு கட்டுப் பாட்டு வாரியத்தின் அனுமதியுடன் செயல்படுகிறதா? என்பது குறித்து விசாரணை நடத்தப்பட்டு வருகிறது. நூல்களுக்கு சாயமிடுதலுக்கு பயன்படுத்தப்படும் ஹைட்ரோ குளோரிக்கசிவு எப்படி ஏற்பட்டது? என்பது குறித்து போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர்

இருக்கும் போது ரத்ததானம்.... இறந்த பின் கண்தானம் செய்வீர்...

# கரூர் அருகே வாழைத் தோட்டத்துக்கு புல்லறுக்க சென்ற மூதாட்டி கொலை



கரூர்: கரூர் அருகே வாழைத் தோட்டத்துக்கு புல்லறுக்கச் சென்ற மூதாட்டி கழுத்தறுத்துக் கொலை செய்யப்பட்ட சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

திருச்சி சரக டிஐஜி சிபி சக்கரவர்த்தி, எஸ்பி ஹரிகிரண் பிரசாத் ஆகியோர் சம்பவ இடத்தை பார்வையிட்டு ஆய்வு செய்தனர்.

கரூர் மாவட்டம் குளித்தலை அருகேயுள்ள லாலாபேட்டையை அடுத்த விட்டுக் கட்டியைச் சேர்ந்தவர் இளஞ்சியம் (60). திருமணமான சில நாட்களிலேயே கணவரை பிரிந்த, இவர் அவரது அக்கா குடும்பத்தினருடன் வசித்து வந்தார்.

வீட்டில் கால்நடைகள் வளர்த்து வருகிறார். லாலாபேட்டை ரயில் நிலையம் அருகேயுள்ள வாழைத்தோப்பில் கால்நடைகளுக்கு புல்லறுப்பது வழக்கம்.

நேற்று மாலை புல்லறுக்கச் சென்ற இளஞ்சியம் அதன் பிறகு வீடு திரும்பவில்லை எனக் கூறப்படுகிறது. இதனால் அவரது உறவினர்கள் இரவு முழுவதும் அக்கம்பக்கத்தில் அவரை தேடியுள்ளனர்.

அவர் புல்லறுக்கச் செல்லும் வாழைத் தோட்டம் பகுதியில் இன்று (அக்.7) காலை தேடி பார்த்துள்ளனர். அப்போது வாழைத் தோப்பில் ரத்தக்கறைகள் இருப்பது கண்டு அதிர்ச்சியடைந்த உறவினர்கள் இளஞ்சியத்தை தேடியப்போது புதர்கள் நடுவே கழுத்தறுக்கப்பட்டு நிலையில் சடலமாக கிடந்துள்ளார்.

இது குறித்து தகவலறிந்த லாலாபேட்டை போலீஸார் சம்பவ இடத்துக்கு விரைந்து சென்று உடலை மீட்டு வழக்குப் பதிவு செய்து விசாரணை மேற்கொண்டனர். மேலும், திருச்சி சரக டிஐஜி சி.பி.சக்ரவர்த்தி, எஸ்பி ஹரிகிரண் பிரசாத் ஆகியோர் சம்பவ இடத்தை பார்வையிட்டு ஆய்வு செய்தனர்.

தொடர்ந்து, தடயவியல் துறையினர், மோப்ப நாய் உதவியுடன் வரவழைக்கப்பட்டு சோதனை மேற்கொள்ளப்பட்டது.

இதனிடையே, மூதாட்டி அணிந்திருந்த மூக்குத்தியை காணவில்லை. ஒருவேளை நகைக்காக மூதாட்டி கொல்லப்பட் டிருக்கலாம் என்ற கோணத்தில் விசாரணை நடத்தி வருகின்றனர்.

Published by K.SABIULLA, printed by K.SABIULLA, on behalf of K.SABIULLA, printed at BEAUTIFUL printers 6/1 devaraja Street, Triplicane chennai 600005.
puplished at 378/46.10th cross, Rajevnagar, manaparai trichy(dis) editor: K.SABIULLA, cell.78100-68421, 9750589992